# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி

**அசல் வழக்கு எண். 32/2023**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | .. | **ரம்யா** | மதம் | .. | **இந்து** |
| தந்தை / கணவர் பெயர் | .. | **சதீஷ்குமார்** | தொழில் | .. | -- |
| வயது | .. | 26 | நாள் | .. | 11.06.2025 |
| கிராமம் | .. | **மலங்காடு** | | | |
| வட்டம் | .. | **சங்ககிரி** | | | |

2025 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 11-ஆம் நாள் புதன்கிழமை ரம்யா என்பவரின் சாட்சிய வாக்குமூலம் 1969-ஆம் ஆண்டின் 44-வது ஏற்பாட்டின்படி திருமதி. இரா.இளமதி பி.ஏ.,பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சங்ககிரி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

வாதிகள் தரப்பு 1-ஆம் சாட்சியின் முதல் விசாரணை

நான் இவ்வழக்கில் 1-ம் வாதி ஆவேன். நான் இவ்வழக்கில் வாதிகள் தரப்பு 1-ஆம் சாட்சி ஆவேன். எனது தரப்பு சாட்சியத்தை நிரூபண பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். சாட்சிய நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள விபரங்கள் அனைத்தும் எனக்கு நன்கு தெரியும். அந்த விபரங்கள் என்னால் சொல்லப்பட்டவைதான். எனது சாட்சியத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

1. 07.12.2011 தேதியிட்ட பாகப்பிரிவினை ஆவணம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.
2. 19.11.2022 தேதியிட்ட பட்டா ஆ.பதிவேடு கணிணி நகல் **வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.
3. 20.03.2023 தேதியிட்ட வழிகாட்டி மதிப்பின் அசல் **வா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.
4. 08.09.2006 தேதியிட்ட திருமண ரத்து பத்திரிக்கை நகல் (அசலுடன் ஒப்பிடப்பட்டு பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் ஆட்சேபனையோடு) **வா.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.
5. 08.09.2006 தேதியிட்ட பவுனாள் ஜீவனாம்சம் பெற்று கொண்ட ரசீது (அசலுடன் ஒப்பிடப்பட்டு பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் ஆட்சேபனையோடு) **வா.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6. வாதி ரம்யா மற்றும் வாதி தாமரைச்செல்வி ஆதார் அட்டை நகல் (அசலுடன் ஒப்பிடப்பட்டது) 2 எண்ணிக்கை **வா.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

7. பரிமளா அவர்களின் குடும்ப அட்டை நகல் (அசலுடன் ஒப்பிடப்பட்டது) **வா.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என்முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

ELAMATHI R

Digitally signed by ELAMATHI R
Date: 2025.06.12 12:17:36 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககிரி.